சிற்றருவி

(குழந்தையர் பாடல்)

இரா. இளங்குமரன்

வெளியீடு

திருவள்ளுவர் தவச் சாலை

திருவளர்குடி (அல்லூர்),

620 101.

சிற்றருவி

(குழந்தையர் பாடல்)

இரா. இளங்குமரன்

மலையகம் சிவம் வரிசை : 2

வெளியீடு

திருவள்ளுவர் தவச் சாலை

திருவளர்குடி (அல்லூர்),

திருச்சிராப்பள்ளி மாவட்டம்,

620 101.

நூலின் தலைப்பு : சிற்றருவி

பதிப்பு ஆண்டு : 1897

நூலின் ஆசிரியர் : இரா. இளங்குமரன்

விலை : உருபா 30/-

வெளியீடு : திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
620 101. தமிழ் நாடு.

கணிப்பொறி அச்சு : ஈகுவர் லேசர்,
சென்னை - 18.

சாரல்

உலகம் கண்ட முதல் நிலம் 'மலை'.

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும்.

குறிஞ்சியின் அழகும் வளமும் சொல்லி முடியாது.

குறிஞ்சிக்குத் தனி அழகு அருவி.

தமிழ்மண்ணுக்கு வாய்த்த அருவி வளங்களுள் தலையாயது குற்றாலம்!

குற்றாலத்து அருவி ஒன்றா, இரண்டா?

சிற்றருவி, புலியருவி, ஐந்தருவி, தேனருவி, முதன்மை அருவி, செண்பக அருவி, பழைய குற்றால அருவி எனப்பல.

அருவிப் பெயர்கள் என்னுள் உருவி நின்றன. முதன்மை அருவிததும்பி விழும் இடம் பொங்குமா கடல்! அதுவும் இணைந்தது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தொட்டுப் பாடிய பாடல்கள் பல்லாயிரம்!

அவற்றுள் குழந்தைகளுக்குரிய பாடலின் ஒரு சிறு தொகுதி 'சிற்றருவி' என்னும் பெயரால் வெளிப்படுகின்றது. இதன் இரண்டாம் தொகுதியும் வரும்.

எழுச்சிப்பாடல்கள் 'புலியருவி'

காதல் பாடல்கள் 'தேனருவி'

பலவகைப் பாடல்கள் 'ஐந்தருவி'

மெய்யுணர்வுப் பாடல்கள் 'பொங்குமாகடல்'

குற்றாலக் குளிர் காட்சி, கொழுந்தமிழ்ப் பாட்டுக்கு இயற்கையானது; இனிமையோடு இசைந்தது.

குழந்தைக்குக் கற்பிக்கப் பெரியவர்களும் கற்க வேண்டும் தானே!

பெரியவர்களுக்கும் பயன்படும்! வளமான உளம் சேரும்!

கற்கும் குழந்தைகளுக்குக் காலம் வளர வளரக் கருத்தும் வளரும் நலம் சேர்க்கும்!

மலையகத் தோன்றல் தவச்சாலைப் புரவலர்திருமலி சிவம் முனுசாமி அவர்கள் கொடையால் சிவம் வரிசையில் வெளிவரும் இரண்டாம் நூல் இச்சிற்றருவி! அடுத்தடுத்து இவ்வரிசையில் அருவியும் கடலும் வெளிவரும்!

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி 620 101.

அன்புடன்
இரா. இளங்குமரன்
16.9.97.

உள்ளுறை

		பக்கம்
1.	பால்பால்	9
2.	கேட்டாயா?	10
3.	திசை	11
4.	பெயர்	12
5.	ஒலி	13
6.	ஒலிப்பேர்	14
7.	கிண்கிணி	15
8.	இரட்டைச்சொல்	16
9.	பாட்டு	17
10.	ஒன்றும் ஒன்றும்	18
11.	மாம்பழம்	19
12.	வானவில்	20
13.	சிறியதும் பெரியதும்	21
14.	கல்வி	22
15.	நிறமாற்றம்	23
16.	சொல்லில்சுவை	24
17.	வண்ணங்கள்	25
18.	பார் சேர்	26
19.	செய்யாதே	27
20.	பல்லைத் தேய்	29
21.	பல்லால் பாதி	30
22.	பாப்பா ஓடிவா	31

		பக்கம்
23.	எல்லா நாளும்	32
24.	கல்! கல்! கல்!	34
25.	சந்தை	35
26.	வழிகாட்டும் இயற்கை	36
27.	வெள்ளாடு	37
28.	பொம்மை	38
29.	காக்கா	39
30.	உலகைமதி	40
31.	ஆவே ஆவே	42
32.	சிட்டுக்குருவி	44
33.	வால்	46
34.	இளமையும்	47
35.	கிளி	49
36.	விலங்குக்காட்சிக்கு	51
37.	தவளையார்	52
38.	பூனை	53
39.	நாய்	55
40.	கழுதை	57
41.	பூங்கா	59
42.	எத்தனை அழகு	61
43.	பழகு	62
44.	திட்டமிடு	64
45.	வாழுதற்கே	66
46.	குறள்	67

		பக்கம்
47.	ஈரடி	68
48.	அழகு	70
49.	முப்பழம்	72
50.	கடலும் வானும்	73
51.	சோம்பல் உண்டா?	75
52.	பசைபோக்கும்	76
53.	போற்றும் வாழ்வு	78
54.	தக்காளி	80
55.	மலர்	81
56.	இரண்டுவாய்கள்	82
57.	எப்படி நிரப்புவது	83
58.	எங்கள் கறவைமாடு	85
59.	மூக்குவளையம்	88
60.	பறக்கும் தட்டு	90
61.	வேலை கெட்டவேலை	93
62.	தேளைக் கடிப்பேன்	95
63.	பிழைகள் அகல	99
64.	நாடு	100
65.	தம்பி கேள்	102
66.	தமிழ்	105
67.	அன்பு	107
68.	காலைக்காட்சி	108
69.	பருவமாற்றம்	111
70.	உடல் நலம்	112

		பக்கம்
71.	கண்ணைக்காத்தல்	114
72.	தாத்தா	116
73.	பாட்டி	118
74.	அப்பா	120
75.	அம்மா	122
76.	அண்ணன்	124
77.	அக்கை	126
78.	தம்பி	128
79.	தங்கை	130
80.	உடன்பிறந்தார்	132
81.	குட்டிப்பையன்	133
82.	புகழ்கூறு	135
83.	ஆசிரியர்	137
84.	உலகம்	139
85.	கோயில்பார்	140
86.	கோயில்	142
87.	இறையவனே	144

1. பால் பால்

பால் பால்

என்ன பால் ?

மாட்டுப் பால்

என்ன மாடு ?

பசு மாடு

என்ன பசு ?

நாட்டுப் பசு

என்ன நாடு ?

தமிழ் நாடு

என்ன தமிழ் ?

செந்தமிழ்.

2. கேட்டாயா?

காகம் கரைதல் கேட்டாயா ?
காலை என்று காட்டாதா ?
சேவல் கூவக் கேட்டாயா ?
சிறந்த காலை காட்டாதா ?
கறவை ஒலியைக் கேட்டாயா ?
களிப்பாய்க் காலை காட்டாதா ?
ஆட்டின் ஒலியைக் கேட்டாயா ?
அதுவே காலை காட்டாதா ?
ஆவ லாக எழுந்திடுவாய் !
ஆகும் கடமை புரிந்திடுவாய் !

3. திசை

கதிரோன் தோன்றும் திசையைப்பார்
காணும் இதுவே கிழக்காகும்
எதிராம் திசையை எண்ணிப்பார்
இதுவே மேற்குத் திசையாகும்
கதிரைப் பார்த்து நிற்குங்கால்
வலக்கைப் பக்கம் தெற்காகும்
இடக்கைப் பக்கம் வடக்காகும்
இவற்றை அறிந்தால், திசைமாற
எந்த இடத்தும் வழியில்லை!

4. பெயர்

கா கா என்னும் காக்கை பார்!
கொக்கொக் கென்னும் கொக்கைப் பார்!
குக்கூ என்னும் குயிலைப்பார்!
குர்க்குர் என்னும் குரங்கைப்பார்!
கொண்ட ஒலியால் பெயர்பெற்றுக்
கொண்ட வகையை அறிந்திடுவாய்!
இயற்கை ஒலியே சொல்லாகும்
இயல்பை விளக்கும் இவைதாமே!

5. ஒலி

ஆட்டுக் குட்டி மே மே மே!
ஆவின் கன்று மா மா மா!
பூனைக் குட்டி ஞாவ் ஞாவ் ஞாவ்!
நாயின் குட்டி ளொள் ளொள் ளொள்!
அணிலின் குஞ்சு கீச் கீச் கீச்!
ஆனால் இவற்றின் பொருளென்ன ?
அன்பே அன்பே அன்பொன்றே
இவற்றின் பொருளாம் அறிவாயே!

6. ஒலிப்பேர்

நாயின் ஒலியோ குரைத்தல்
நரியின் ஒலியோ ஊளை
குயிலின் ஒலியோ கூவல்
மயிலின் ஒலியோ அகவல்
கூகை ஒலியோ குழறல்
கிளியின் ஒலியோ மிழற்றல்
ஆந்தை ஒலியோ அலறல்
வண்டின் ஒலியோ மூசல்
குதிரை ஒலியோ கனைத்தல்
கழுதை ஒலியோ கத்தல்
ஒவ்வோர் ஒலிக்கும் ஒருபேர்
உண்டாம் தமிழில் உரைப்பாய்!

7. கிண்கிணி

கிண் கிண் கிண்கிணியாம்
சல் சல் சல்லரியாம்
சில் சில் சிலம்பதுவாம்
கல் கல் கலகலப்பாம்
மத் மத் மத்தளமாம்
கொட் கொட் கொட்டாகும்
கொக் கொக் கொக்கரையாம்
ஒலிக்கும் ஒலியாலே
ஒன்றும் இவையெல்லாம்.

8. இரட்டைச்சொல்

பளபளக்கும் மின்வெட்டே
சளசளக்கும் மழைப் பொழிவே!

படபடக்கும் இடிமுழக்கம்
கடகடக்கும் மாட்டுவண்டி!

கலகலக்கும் குழந்தையொலி
சலசலக்கும் நீரோட்டம்!

மதமதப்பாய் நில்லாமை
பதபதப்பாய் நடுங்காமை

கடுகடுப்பாய்ப் பேசாமை
கருத்துடனே எண்ணிப்பார்!

இரட்டையிலே நீங்காமை
இன்னவற்றின் இயல்பறிவாய்!

இரட்டைநீக்கிச் சொல்லிப்பார்
இல்லையன்றோ எப்பொருளும்?

9. பாட்டு

தங்கத் தாத்தா பாட்டு
தாடி மீசை காட்டு!

பொன்னுப் பாட்டி பாட்டு
பொக்கை வாயைக் காட்டு!

மாமா மாமா பாட்டு
மகிழ்வாய் வண்டி ஓட்டு!

மாமி மாமி பாட்டு
மல்லிகைப் பூவைச் சூட்டு!

10. ஒன்றும் ஒன்றும்

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஓடி எறிவது குண்டு

இரண்டும் இரண்டும் நாலு
பசுவில் கறப்பது பாலு

நாலும் இரண்டும் ஆறு
தட்டில் இருப்பது சோறு

ஆறும் இரண்டும் எட்டு
நெற்றியில் வைப்பது பொட்டு

எட்டும் இரண்டும் பத்து
ஒழுக்கம் ஒன்றே சொத்து.

11. மாம்பழம்

அருமை அருமை மாம்பழம்;
ஆசை ஆசை மாம்பழம்;
இனிப்பு மிக்க மாம்பழம்;
இன்று வந்த மாம்பழம்;
மாமா தந்த மாம்பழம்;
மல்கோ வா மாம்பழம்;
தூக்கக் கூட முடியாமல்
தூக்கி வந்த மாம்பழம்;
இத்தனை ஏனாம் மாம்பழம் ?
இன்று தானாம் சம்பளம் !

12. வானவில்

ஏழு நிற வில்லாய்
ஏதுக் கடா தோன்றும் ?

வாழு மழை பெய்து
வானம் துளி விட்டால்
வீழும் கதிர் பட்டு
வில்லாய் அது தோன்றும்.

13. சிறியதும் பெரியதும்

எத்தனை சிறிய மழைத்துளி!
எப்படி இந்தப் பெருக்காறு?
எத்தனை சிறிய முல்லைப்பூ!
எத்தனை பெரிய மணமாலை?
எத்தனை சிறிய நூலிழை!
எத்தனை பெரிய நல்லாடை!
எத்தனை சிறிய தென்றாலும்
எண்ணம் பெருகின் குன்றாமே!

14. கல்வி

கல்வி இனிய கரும்பு – அதைக்
கற்க என்றும் விரும்பு.
கற்க விரும்பாக் குறும்பு – பெருங்
காற்றிற் பறக்கும் துரும்பு.

கல்வி நல்ல தேனாம் – நற்
கனியின் சாறு தானாம்
கற்க வெறுப்ப தேனாம் ? – அதைக்
கருதா வாழ்வு வீணாம் !

கல்வி தானே கண்ணாம் – விரும்பிக்
கல்லார் கண்ணோ புண்ணாம்.
கல்வி கண்ணே என்றால் – அதை
இல்லார் வாழ்வு என்னாம் ?

15. நிறமாற்றம்

பச்சை மிளகாய் பச்சை
பழுத்தால் அதுவே சிவப்பு!

பாகற் காயோ பச்சை
பழுத்தால் அதுவே மஞ்சள்!

ஆலின் இலையோ பச்சை,
அதுவே பழுத்தால் பழுப்பு!

பயிரின் இயல்பு பச்சை
பருவ மாற்றம் வேறே!

உயிரின் இயல்பும் ஒன்றே
உணர்வின் இயல்பு வேறே!

16. சொல்லில் சுவை

இனிப்புச் சுவையே மாம்பழம்;
புளிப்புச் சுவையே எலுமிச்சை;
உறைப்புச் சவையே மிளகாயாம்;
துவர்ப்புச் சுவையே வாழைக்காய்;
உவர்ப்புச் சுவையே உப்புக்கல்;
கசப்புச் சுவையே பாகற்காய்;
ஆறு சுவைகள் இவையென்றால்
இவற்றின் கலப்போ ஆயிரமாம்!
சுவையைப் பெருக்கும் நாவுடையார்
சொல்லும் சொல்லில் சுவையாக்கி
நலத்தைப் பெறுதல் பண்பாடு!
நாட்டுக் கினிதாம் பண்பாடு!

17. வண்ணங்கள்

வானம் நீல வண்ணம்பார்!
வயலில் பச்சை வண்ணம்பார்!
பாலில் வெள்ளை வண்ணம்பார்!
பவழம் சிவப்பு வண்ணம்பார்!
காக்கை கரிய வண்ணம்பார்!
ஐந்து வண்ணக் கிளியைப்பார்!
ஏழு வண்ண வில்லைப்பார்!
எண்ண முடியா வண்ணங்கள்
இலையில் பூவில் கண்டறிவாய்!
வண்ணம் பலவே ஆனாலென்?
வருமோர் முட்டல் அங்கில்லை!
எண்ணம் பலவே ஆனாலென்?
இசைந்து வாழல் வாழ்வாமே!

18. பார்! சேர்!

விரிந்த வானம் பார்தம்பி
விரிவின் விரிவைச் சேர்தம்பி;

பரந்த கடலைப் பார்தம்பி
பரந்த உள்ளம் சேர்தம்பி;

ஒளிரும் சுடரைப் பார்தம்பி
ஒளியை உன்னுள் சேர்தம்பி;

குளிரும் மதியைப் பார்தம்பி
குளிரும் உள்ளம் சேர்தம்பி;

மலரும் மலரைப் பார்தம்பி
மலரும் உளத்தைச் சேர்தம்பி;

இனிய தேனைச் சுவைதம்பி
இன்சொல் உன்சொல் அவைதம்பி!

19. செய்யாதே

காலைச் சுவரில் வையாதே
கறையைப் படியச் செய்யாதே
நீரைக் கொட்டி வடியாதே
நீயே வழுக்கித் துடியாதே!

தாளைக் கிழித்துப் போடாதே
தட்டை வீசி ஆடாதே
கூளம் குப்பை ஆக்காதே
கூட்டி அள்ள வைக்காதே!

கட்டெ றும்பைப் பிடியாதே
சிற்றெ றும்பை மிதியாதே
பல்லி பாச்சை அடியாதே
பாவம் பாவம் பாவமே!

குட்டி முட்டித் திரியாதே
குடுமிச் சண்டை போடாதே
திட்டித் திமிரி அலையாதே
தேனைப் போல மொழிவாயே!

20. பல்லைத்தேய்

பல்லைத்தேய் பல்லைத்தேய் – பாப்பா
பல்லைத்தேய் பல்லைத்தேய்

முல்லைப்பூப் போலாக
முத்துக்கள் போலாகப் – பல்லைத்.

சொள்ளைப்பல் ஆகாமல்
சொத்தைப்பல் ஆகாமல் – பல்லைத்.

பாலைப்போல் வெள்ளையாய்
பட்டைப்போல் வெள்ளையாய் – பல்லைத்.

கல்லைப்போல் மண்ணைப்போல்
கண்டொன்றைக் கொள்ளாமல் – பல்லைத்.

ஆலைப்போல் வேம்பைப்போல்
வேலைப்போல் தேடிப்போய்ப் – பல்லைத்.

21. பல்லால் பாதி

நல்ல நல்ல பல்லிருந்தால்
நல்ல நல்ல நட்பிருக்கும்
மல்லிகை முல்லைப் பல்லிருந்தால்
எல்லார் முன்னும் சிரித்திடலாம்!

பொல்லா அழுக்குப் பல்லிருந்தால்
போவார் ஓடி வாய்மூடி;
பல்லால் பாதி சிறப்பாகும்
சொல்லால் பாதி சிறப்பாகும்.

22. பாப்பா ஓடிவா

குட்டிப் பாப்பா ஓடிவா;
குண்டுப் பாப்பா ஓடிவா;
சுட்டிப் பாப்பா ஓடிவா;
சுடரும் பாப்பா ஓடிவா;
மொட்டைப் பாப்பா ஓடிவா;
முத்துப் பாப்பா ஓடிவா;
கட்டித் தங்கம் போலவே
கையில் எடுக்க ஓடிவா!

ஆட்டம் ஆடி ஓடிவா;
அழகு காட்டி ஓடிவா;
பாட்டுப் பாடி ஓடிவா;
பையப் பைய ஓடிவா;
ஓட்டம் இன்றி ஓடிவா;
உவகை யாக ஓடிவா;
வாட்ட மில்லா மாலையாய்
வாங்கிக் கொள்ள ஓடிவா.

23. எல்லா நாளும் நன்னாளே

ஞாயி றன்று பிறந்தவனே
நன்மை யெல்லாம் அடைவாயே!
திங்க ளன்று பிறந்தவனே
திறமை பலவும் பெறுவாயே!

செவ்வாய் அன்று பிறந்தவனே
செல்வச் செழிப்பில் வாழ்வாயே!
புதனாம் நாளில் பிறந்தவனே
புகழில் சிறந்து வாழ்வாயே!

வியாழ னன்று பிறந்தவனே
விளங்கும் அறிவில் உயர்வாயே!
வெள்ளி யன்று பிறந்தவனே
வெற்றி யாவும் பெறுவாயே!

சனியாம் கிழமை பிறந்தவனே
சலியா உறுதி அடைவாயே
எந்த நாளில் பிறந்தாலும்
எந்தக் குறையும் வருவதிலை!

எல்லா நாளும் நன்னாளே!
எவர்க்கும் ஏற்ற பொன்னாளே!
இயற்கை தந்த நாள்களிலே
எவரே குறைகள் காண்பதுவே!

24. கல்! கல்! கல்!

கல் கல் கல்! – குழந்தாய்!
கற்றதைத் தெளிவாய்ச்
சொல் சொல் சொல்!

சொல் சொல் சொல்! – குழந்தாய்!
சொல்லிய படியே
நில் நில் நில்!

நில் நில் நில் – குழந்தாய்!
நேயத்தின் உருவாய்ச்
செல் செல் செல்!

செல் செல் செல்! – குழந்தாய்
சென்றிடும் துணிவால்
வெல் வெல் வெல்!

25. சந்தை

இன்று சந்தை செல்லலாம்
ஏற்ற பொருள்கள் வாங்கலாம்

கிழங்கு தேங்காய் வாங்கலாம்
கீழே பையில் போடலாம்

காய்வ கைகள் வாங்கலாம்
கருதி அதன்மேல் போடலாம்

பழவ கைகள் வாங்கலாம்
பார்த்தே அதன்மேற் போடலாம்

மல்லி தழைகள் வாங்கலாம்
மணக்க மேலே போடலாம்

வாங்கும் திறமும் வேண்டுமே
வைக்கும் திறமும் வேண்டுமே

வாங்கும் பொருளால் பயனென்ன
வைக்கும் திறமை இல்லாக்கால்!

26. வழிகாட்டும் இயற்கை

கோகோ எனக்கூவும் சேவல் – அது
போபோ எனஏவும் ஏவல்!
காகா எனக்கரையும் காக்கை – அது
காலம் தவறாத வாக்கே!

பண்ணாகப் பாடிடும் வண்டு – அது
பகவற்குச் செய்திடும் தொண்டு.
விண்ணேறி வந்திடும் வெய்யோன் – அவன்
வேலை இலையெனில் உய்யோம்!

அம்மா எனமுழங்கும் ஆக்கள் – உயர்
அன்னையர் வாழ்கெனும் வாழ்த்தே
சும்மா எவையேனும் உண்டோ? – அவை
சொல்லும் பொருளுக் களவுண்டோ?

27. வெள்ளையாடு

அங்கே பாரு வெள்ளாடு
அதற்குக் குட்டி ஐந்தாறு – அங்கே

கருமை வெண்மை கருஞ்சிவப்பு
கலந்த நிறங்கள் பலவேனும்
அருமை நிறங்கள் அவையாமே
அன்பு நிறங்கள் அவையாமே!

பெருமை சிறுமை நிறத்தாலே
பேசத் தெரியா வெள்ளாடு
பெருமை உணரா மாந்தர்க்குப்
பேசாப் பொருளைப் பேசுவதே!

28. பொம்மை

குட்டிப் பாப்பா பொம்மைபார்
குழந்தைப் பாப்பா பொம்மைபார்
சட்டி வயிற்றுப் பொம்மைபார்
தஞ்சா வூருப் பொம்மைபார்!

தட்டித் தள்ளி விட்டாலும்
தடுக்கி வீழாப் பொம்மைபார்
தட்டி வீழும் நமைப்பார்த்துத்
தானே சிரிக்கும் பொம்மைபார்!

29. காக்கா

காக்கா காக்கா காக்காக்கா
கால மெல்லாம் காக்காக்கா
காக்கை மொழியே காக்காக்கா
காணும் பொருளும் காக்காக்கா

என்ன என்ன செய்திகளை
இந்தக் காக்கா சொல்கிறதோ ?
பின்னிக் கிடக்கும் வாழ்வெல்லாம்
பேசி விடுமோ காக்காவால்!

ஒலியொன் றாலே உணர்வெல்லாம்
உணர்த்தும் காக்கை ஆசானால்,
ஒலிகள் பலவாம் மொழிவளத்தை
உணர வாய்த்தல் பெரும்பேறே.

30. உலகை மதி

உருவிற் பெரிது யானை
உருவிற் சிறிது பூனை
உருவத் தாலே என்ன ?
உதவும் வாழ்வுக் கொன்றே !

வீட்டுக் காகும் பானை
பாட்டுக் காகும் மோனை
ஈட்டும் உதவி எண்ணின்
இரண்டும் வேண்டும் தானே !

ஏற்றம் இறைக்கும் கூனை
கூற்றம் போலும் தானை
மாற்றம் ஆன வேனும்
வாழ்வுக் குரித்தாம் தானே !

உலகத் துள்ள வெல்லாம்
உதவி யாதல் உண்மை
உலகை அறிந்து கொண்டால்
உலகை மதிப்போம் நன்றாய்!

31. ஆவே ஆவே!

ஆவே ஆவே வாவா!
அம்மா அம்மா வாவா!
தாயே பசுவே வாவா!
தடவித் தருவேன் வாவா!

வேளை தோறும் நீயே,
விரும்பும் பாலைத் தருவாய்!
காளை கன்றும் தருவாய்!
காட்டுக் குரமும் தருவாய்!

அமைதி யான உனக்கே,
அமைந்த கொம்பும் எதற்கே?
சுமையாய் எண்ணிக் கொண்டேன்,
சொல்வாய் பயனும் உண்டோ?

பாம்பு வாலும் உனக்கே,
பாழாய் அமைந்த தென்றே,
வீம்பாய் எண்ணிக் கொண்டேன்!
விரும்பும் பயனும் உண்டோ ?

ஈயும் கொசுவும் பார்த்தேன்
இவற்றை ஓட்ட ஆட்டி
நீயும் காட்டத் தெரிந்தேன்
நேரும் பயனை உணர்ந்தேன்.

எந்த உயிரும் பயனே
எந்த உறுப்பும் பயனே
அந்தப் பயனை உணர்ந்தே
ஆக்க மாக்கல் கடனே!

32. சிட்டுக் குருவி

சிட்டுக் குருவி கிட்டேவா!
சிறிய குருவி கிட்டேவா!
பட்டுக் கறுப்பே கிட்டேவா!
பளிங்குக் கறுப்பே கிட்டேவா!

எட்டி எட்டி நடந்தாலும்,
கிட்டக் கிட்ட என்நடையைத்,
தொட்டுக் கூட நெருங்காத
சிட்டே சிட்டே கிட்டேவா!

எட்டில் சிறுத்த சிட்டேநீ!
எட்ட மாட்டா உயரத்தைத்
தொட்டுப் பறப்பாய் உனைமுத்தம்
கொட்டிப் பொழிவேன் கிட்டேவா!

துள்ளி நடக்கும் சிட்டேநீ
துவளும் குழந்தை மொட்டேநீ
அள்ளும் பந்துத் தட்டேநீ
அயரா இயக்க வட்டேநீ!

33. வால்

மாட்டின் வாலோ நெட்டை
ஆட்டின் வாலோ குட்டை

நாயின் வாலோ மேலே
நரியின் வாலோ கீழே

அணிலின் வாலோ கற்றை
எலியின் வாலோ மொட்டை

குரங்கின் வாலோ வாலி
குருவி ஒன்றும் வாலி

வாலில் லாதும் குரங்காம்
வையம் புதுமைக் கரங்காம்!

34. இளமையும் முதுமையும்

முருகன் மிகவும் நல்லவன்;
மூர்த்தி தானும் நல்லவன்;
அருகே நாங்கள் இருக்கிறோம்
அன்பு நண்பாய் இருக்கிறோம்!

சால மோனும் நல்லவன்;
சலீமும் மிகவே நல்லவன்;
பாலும் தேனும் போலவே
பழகி நாங்கள் வாழ்கிறோம்!

எங்கள் உள்ளம் இனியவே;
எங்கள் உறவும் இனியவே;
உங்கள் உள்ளம் எப்படி,
உறவு தானும் அப்படி!

இளமை தானே முதுமையாய்
என்றும் வளரக் காண்கிறோம்!
இளமை வளர்ச்சி சண்டையா?
என்ன கொடுமை கண்டதே!

குழந்தை கள்போல் முதியரும்
கூடி வாழ வேண்டுமே!
பழுத்த பழத்தின் சுவையதும்
பாரும் பிஞ்சில் குறைந்ததோ?

வழியைக் காட்டும் பெரியவர்
வழியைத் தவறிப் போவதால்
பழியும் மிகுமே பாவமும்
பல்கிப் பெருகி ஆகுமே!

35. கிளி

பச்சைக் கிளியைப் பார்பார்!
பவழ வாயைப் பார்பார்!
ஒற்றைக் காலை ஊன்றி,
உண்ணும் அழகைப் பார்பார்!

வாலின் நீளம் பார்பார்!
வண்ணக் கழுத்தைப் பார்பார்!
ஆலம் பழமோ வாய்க்குள்,
அன்றிப் பவழம் தானோ?

பெட்டைக் கிளியைப் பார்பார்!
பிள்ளைக் கிளியைப் பார்பார்!
கொட்டை உடைக்கும் வாயால்,
கொஞ்சும் அழகைப் பார்பார்!

ஐந்து வண்ணம் கொண்ட
அழகுக் கிளியைப் பார்பார்!
கொஞ்சிக் குலவி நிற்கும்
கொள்ளை இன்பம் பார்பார்!

36. விலங்குக் காட்சிக்கு வரவேண்டா

யானை யாரும் வருவாராம்
அரிய காட்சி தருவாராம்.
பூனை யாரே போகாதீர்
புதைந்து காலுள் சாகாதீர்!

தீயே விழியாம் புலியுண்டு
திகைத்துப் போவாய் கிலிகொண்டு
நாயே நாயே போகாதே
நடுங்கிப் பதறிச் சாகாதே!

37. தவளையார்

தவளை யாரும் வருகின்றார்;
தாவ முடியா துருள்கின்றார்;
தவலைப் பானை பிடிக்கின்ற
தண்ணீர் ஏனோ குடிக்கின்றார் ?

குரலை உயர்த்தி இடிக்கின்றார்
கொட்டும் முரசை மடக்கிவிட !
உரலில் குழவி இரைந்தாலும்
ஒட்டி வருமோ சிறிதேனும் ?

தொண்டைப் பறையை அடிக்கின்றார்
தூள்தூள் என்றே துடிக்கின்றார்;
சண்டைக் காக எழுந்தாரா ?
சரிதான் பகைவர் விழுந்தாரே !

38. பூனை

பூனை நல்ல அழகாம்!
புதிய குட்டி அழகாம்!
தேனைத் தொட்ட மென்மை
திகழும் பூனைத் தன்மை!

மெத்தைக் காலின் பூனை;
மெதுவாய் ஏறும் பானை;
மொத்தைத் தயிரைக் குடிக்கும்,
மூலை பார்த்துப் படுக்கும்!

பகலில் அமைதி கொள்ளும்;
இரவில் எழுச்சி துள்ளும்;
அகலும் கண்கள் சுருங்கின்,
அந்த அமைதி நெருங்கும்!

குப்பை கிடந்தால் எலிகள்
கூடிக் குலாவும் புலிகள்
ஒப்பிப் பூனை வந்தால்
ஓடிப் போகும் நொந்தே.

சோம்பல் பூனை உண்டு;
சொல்லும் எலிகள் அண்டி
வீம்பு செய்தும் தூங்கும்!
விடியா மூஞ்சிப் பூனை!

39. நாய்

நாயைப் பார்ப்பாய் தம்பி – அதன்
நாவைப் பார்ப்பாய் தம்பி.

சுற்றிச் சுற்றி ஓடும் – அது
சொகுசாய்த் துள்ளி ஆடும்
வட்ட மிட்டே படுக்கும் – அதன்
வாலைத் தூக்கி எடுக்கும்!

முன்னங் காலை நிறுத்தி – அதன்
பின்னங் காலை மடக்கி,
சின்ன காதை நிமிர்த்தி – அது
செய்யும் அழகோ உயர்த்தி!

வீட்டை நன்றாய்க் காக்கும் – அது
வீர வாழ்வை ஊக்கும்;
கோட்டைக் குள்ளே நின்றும் – அது
குரைக்கும் நாயைக் கண்டால்.

இனத்தை எதிர்க்கும் இழிமை – அதன்
இயற்கை யான தென்னே ?
இனத்தை விட்டுப் பிரித்தே – நாம்
இறுக்கி வைத்த தாமோ ?

40. கழுதை

பொறுமை யான கழுதை – துணிப்
பொதி சுமக்கும் கழுதை.

அழுக்குத் துணியும் சுமக்கும் – நல்ல
வெளுப்புத் துணியும் சுமக்கும்
ஏழை துணியும் சுமக்கும் – நல்ல
செல்வர் துணியும் சுமக்கும் – பொறுமை

அழுக்குத் துணியும் தின்னும் – நல்ல
வெளுப்புத் துணியும் தின்னும்;
ஏழை துணியும் தின்னும் – நல்ல
செல்வர் துணியும் தின்னும் – பொறுமை

வைத்த சுமையைத் தாங்கும்;
வைத்த அடியும் தாங்கும்;
வைத்த தீனி தின்னும்;
வைத்த நீரும் குடிக்கும் – பொறுமை

பொறுமை யான எண்ணம் – மிகப்
பொதுமை யான செய்கை
வெறுப்போ விருப்போ இல்லை – இந்த
வெள்ளி மூக்கன் வாழ்வில் – பொறுமை.

41. பூங்கா

பூங்கா வுக்குப் போகலாம்,
பூரிப் பாகப் பார்க்கலாம்!
ஓங்கும் இன்பம் கொள்ளலாம்,
உரிமை யாகச் செல்லலாம்!

வண்ண வண்ணச் செடிகளும்,
வனப்பு மிக்க கொடிகளும்,
எண்ண முடியாப் பூக்களும்,
இருந்த படியே நோக்கலாம்!

பச்சைப் புல்லைக் காணலாம்,
படரும் பந்தல் காணலாம்,
இச்சை வண்டின் இசையினை
இனிதாய்க் கேட்டு மகிழலாம்!

பூவைப் பறித்தல் ஆகாது;
புல்லை மிதித்தல் கூடாது;
காவை நம்தம் உடைமையாய்க்
காத்தல் என்றும் கடமையே.

42. எத்தனை அழகு நிலவினிலே

எத்தனை அழகு நிலவினிலே
ஏதும் இல்லை செலவினிலே!

மூத்த இயற்கை நரைப்புருவம்
முழுத்த மதியின் பிறையுருவம்!

மூன்றாம் பிறைதான் ஒளிவில்லே
மோதல் இல்லாக் களிவில்லே!

பிறந்த குழந்தை இப்பிறைதான்
பின்னர் வளரும் முத்திரைதான்!

எட்டாம் பிறையாம் ஒருபாதி
வெள்ளி யோடச் சரிபாதி!

முழுத்த மதியில் நிறைகூடின்
முதிர்ந்த தேங்காய் அரைமூடி!

— எத்தனை.

43. பழகு

ஓடப் பழகு தங்காய் – நீ
ஓடும் போதே நன்றாய்க்
கூடப் பழகு தங்காய் – நண்பாய்க்
கூடப் பழகு தங்காய்!

ஆடப் பழகு தங்காய் – நீ
ஆடும் போதே நன்றாய்ப்
பாடப் பழகு தங்காய் – பண்பாய்ப்
பாடப் பழகு தங்காய்!

தேடிப் பழகு தங்காய் – நீ
தேடிப் பழகும் போதே;
தேடப் பழகு தங்காய் – உண்மை
தேடப் பழகு தங்காய்!

மூடிப் பழகு தங்காய் – நீ
மூடிப் பழகும் போதே
மூடப் பழகு தங்காய் – பொய்யை
மூடப் பழகு தங்காய்!

44. திட்டமிடு

பட்டம் விடுதம்பி – நீ
பட்டம் விடு!

பட்டம் விடும் போதே – நீ
பட்டம் பெறத்
திட்டமிடு தம்பி – நீ
திட்ட மிடு!

திட்டமிடு தம்பி – நீ
திட்டமிடு

பட்டம் பெறும் போதே – நீ
பட்டொளி செய்யத்
திட்டமிடு தம்பி – நீ
திட்டமிடு!

திட்டமிடு தம்பி – நீ
திட்டமிடு

பட்டொளி செய்யும் போதே – நீ
பட்டய மாகத்
திட்டமிடு தம்பி – நீ
திட்டமிடு!

45. வாழுதற்கே வள்ளுவம்

பேசு தற்கோ சந்தனம்,
பூசு தற்கோ சந்தனம் ?

பேணு தற்கோ அணிகலம்,
பூணு தற்கோ அணிகலம் ?

காட்டு தற்கோ வீணையும்,
மீட்டு தற்கோ வீணையும் ?

எண்ணு தற்கோ ஊண்வகை,
உண்ணு தற்கோ ஊண்வகை ?

– சூழு தற்கோ வள்ளுவம்
வாழு தற்கே வள்ளுவம் !

46. குறள்

கடிக்கவோ – சாறு
குடிக்கவோ – கரும்பு
கடிக்க வோ – சாறு
குடிக்க வோ ?

தூற்றவோ – மானம்
போற்றவோ – உடை
தூற்றவோ – மானம்
போற்றவோ ?

படிக்கவோ – கடைப்
பிடிக்கவோ – குறள்
படிக்கவோ – கடைப்
பிடிக்கவோ ?

47. ஈரடி

தேரடி எல்லாம் சுற்றிவரத்
தேர்ந்த அடிகள் எத்தனை – குழந்தாய்
தேர்ந்த அடிகள் எத்தனை ?

ஈரடி தானே குழந்தாய்
திருக்குறள் ஈரடி தானே !

ஊரடி எல்லாம் ஊர்ந்துவரத்
தேர்ந்த அடிகள் எத்தனை – குழந்தாய்
தேர்ந்த அடிகள் எத்தனை ?

ஈரடி தானே குழந்தாய்
திருக்குறள் ஈரடி தானே !

பாரடி எல்லாம் படர்ந்துவரத்
தேர்ந்த அடிகள் எத்தனை – குழந்தாய்
தேர்ந்த அடிகள் எத்தனை ?

ஈரடி தானே குழந்தாய்
திருக்குறள் ஈரடி தானே!

சீரடி யாலே செழுமையுறச்
சேரும் அடிகள் எத்தனை குழந்தாய்
சேரும் அடிகள் எத்தனை ?

ஈரடி தானே குழந்தாய்
திருக்குறள் ஈரடி தானே.

48. அழகு

பட்ட மரமும் அழகாகும்
பாலை வெளியும் அழகாகும்
கொட்டும் மழையும் அழகாகும்
கொண்ட உணர்வே அழகன்றோ!

தீயும் தெய்வ அழகாகும்
தேளும் பார்க்க அழகாகும்
நாயும் இனிய அழகாகும்
நயக்கும் உணர்வே அழகன்றோ!

புல்லில் அழகு பொருந்தாதோ?
புலியில் அழகு பேசாதோ?
புல்வாய் மானின் அழகென்னே!
பொருந்தும் உணர்வே அழகன்றோ!

தாழை மடலின் பூவினிலே
தழைக்கும் மழலை நாவினிலே
வாழை தென்னைக் காவினிலே
வாழும் உணர்வே அழகன்றோ!

49. முப்பழம் – மூவினம்

முப்ப ழங்கள் அறிவீரா ?
மூவி னங்கள் அறிவீரே !

முப்ப ழங்கள் வாழைமா
முட்டு பலாவாம் பேரினவே !
மூவி னங்கள் மெல்லினமே
முந்தும் இடையே வல்லினமே !

முப்ப ழங்கள் சுவையினவே
மூன்று வகையாம் சுவையினவே;
மூவி னம்மும் இனியனவே
மூவ கையாம் இனியனவே !

முப்ப ழங்கள் சுவைத்திடவே
முயற்சி யளவை அறிவீரே,
மூவி னங்கள் ஒலித்திடவே
முயற்சி அளவை அறிவீரே !

50. கடலும் வானும்

கண்ணுக் கெட்டாக் கடலோடு
காணும் வானம் கைகோத்தல்
விண்ணும் மண்ணும் இணைவதனை
விளக்கும் காட்சி யாமன்றோ!

நீரின் நீல நிறத்தோடு
நீல வானின் நிறஞ்சேர்ந்து
பாரும் நீலப் பரப்பென்றே
பாரை இணைக்கும் சான்றன்றோ!

நீரை அள்ளி நெடுவானில்
நீளச் சென்று மழையாகிப்
பாரை வளர்க்கும் வளச்செய்தி
பணியால் இணைக்கும் பண்பன்றோ!

மண்ணும் விண்ணும் ஒன்றாகும்
மாண்பை மாந்தர் கண்டறிந்து
மண்ணு ளோனும் ஒருமையினை
மலரச் செய்தல் கடனன்றோ!

51. சோம்பல் உண்டா?

காலைப் பொழுதில் குளிப்பவர்க்குக்
கட்டும் உடையைத் துவைப்பவர்க்கு
மாலைப் பொழுதில் நடப்பவர்க்கு
மண்டிய சோம்பலும் வந்திடுமோ ?

கடமை உணர்ந்த பெரியவர்க்குக்
காலத்தை மேலாய் மதிப்பவர்க்கு
மடமை ஒழிய உழைப்பவர்க்கு
மையலாம் சோம்பலும் வந்திடுமோ ?

தொண்டர் பெருமை புகல்பவர்க்குத்
தொண்டில் நிலைத்த மனத்தவர்க்குத்
தொண்டில் முழுகும் செயலினர்க்குத்
தொல்லையாம் சோம்பலும் வந்திடுமோ ?

52. பசைபோக்கும் படிப்பு

கரிய கரிய பாசியைக்
கட்டி வைத்த மாலைபோல்
அரிய தவளை முட்டைகள்
அழகாய் நீரில் மிதந்திடும்!

நீருள் மூழ்கா வண்ணமாய்
நீச்சல் அடிக்கும் மாலைகள்!
வாரிக் கொள்ள முடியாமல்
வழுக்கிச் செல்லும் மாலைகள்!

மாலை எங்கே போயதோ?
மாறி மாறிப் பார்க்கிறேன்!
வாலும் தலையும் வாய்த்தவை,
வருதல் கண்டு மகிழ்கிறேன்!

சிலநாட் செல்லப் பார்க்கிறேன்
　　சேர்ந்த வாலைக் காணாமல்
பலநாள் எண்ணி வியக்கிறேன்
　　பயிற்றும் கருத்தை நயக்கிறேன்!

உணர்ச்சி இல்லாப் பருவத்தில்
　　ஒட்டுப் பசைபோல் வாழ்ந்தாலும்
இணங்கும் இளமைப் பருவத்தில்
　　இனிதாய்ச் செருக்கித் திரிந்தாலும்

உயர்ச்சி பெற்றால் பசைபோகும்
　　முதிர்ச்சி பெற்றால் செருக்கோடும்
உயர்ந்த இவற்றைப் பயிற்றற்கே
　　உலகில் தவளை உள்ளனவோ!

53. போற்றும் வாழ்வு

பூவால் அறிவோம் சிரிப்பினையே;
புகலும் வண்டால் பாட்டறிவோம்;
ஓவா திணைந்து மரத்தோடும்,
ஒன்றும் கொடியால் பணிவறிவோம்!

காற்றால் மென்மை நலமறிவோம்;
கலக்கும் பாலோ டுயர்நீரால்
போற்ற இணைந்து பிரியாத
புகழ்சால் நட்பின் இயலறிவோம்!

கதிரின் வரவால் விழிப்புறக்கக்
கடமை அறிந்து தெளிந்திடுவோம்;
அதிரும் மழையின் துளிப்பெருக்கால்
அன்பால் கூடும் செறிவறிவோம்!

அரைபட் டுளையும் சந்தனத்தால்
அயலார்க் குதவும் நயமறிவோம்!
புரையற் றோங்கும் ஆசானால்,
பொலியும் கல்வித் தகவறிவோம்!

பெரியர் வரலாற் றுணர்வாலே
பெயரா வாழ்க்கைச் சீரறிவோம்!
உரிய இன்பு துன்புகளால்
உண்மை உணர்வை மிகுத்திடுவோம்!

காண்போம் கற்போம் சிந்திப்போம்
கனிந்த பண்பால் அரியவற்றைப்
பூண்போம் வாழ்வோம் புவிக்காக!
போற்றும் வாழ்க்கை இவையன்றோ!

54. தக்காளி

காளி கூடைத் தக்காளி;
கனிந்து போன தக்காளி;
வள்ளி கூடைத் தக்காளி;
வாடிப் போன தக்காளி;
பேச்சி கூடைத் தக்காளி;
பிஞ்சுப் பிஞ்சுத் தக்காளி;
அழகி கூடைத் தக்காளி;
அழுகிப் போன தக்காளி;
வேண்டா இந்தத் தக்காளி
என்று நடக்கத் தொடங்கினேன்!
நல்ல நல்ல தக்காளி
நான்கு பேரும் குவிக்கிறார்
என்ன அழகு வாணிகம்!
ஏனாம் இந்த ஏமாற்றே?

55. மலர்

உள்ளங் கவரும் மலரே
உன்னைப் போன்றோர் சிலரே

கள்ளம் இல்லா மனமே
காட்டும் உன்றன் இனமே

வெள்ள மாக மலர்கள்
விரிந்து மேலே மலர்ந்தும்

உள்ளங் கொள்ளார் நிலையோ
உதிரப் போகும் இலையே!

56. இரண்டு வாய்கள்

உள்ளே கொள்ளும் வாய்வேறே
வெளியே தள்ளும் வாய்வேறே;
உள்ளும் வெளியும் ஒருவாயாய்
இருந்தால் சீசீ இழிவன்றோ ?

சாலை யோரம் இருக்கின்றான்
சார்ந்து வெளிக்கும் இருக்கின்றான்;
சாலை யோரம் படுக்கின்றான்
சார்ந்து சிறுநீர் விடுகின்றான்;

நடக்க உள்ள சாலையிலே
நடக்க மாட்டான் ஓரத்தே;
நடுவே நடப்பான் எருமையென
நல்ல பிறவி அய்யய்யா !

57. எப்படி நிரப்புவது?

“அன்புறு மக்காள்! உங்கள்
அறைகளை நிரப்பி வைத்தால்
இன்றிவண் மீண்டும் எய்தி,
இன்புறக் காண்பன்” என்று,
சென்றனர் தந்தை; அந்தச்
சிறுவரோ உவகை கொண்டு
நன்றென நிரப்ப லானார்,
நயத்தகு தந்தை காண.

உந்திய உணர்ச்சி தள்ள
உவகையால் மீண்ட தந்தை
முந்திய மைந்தன் வைக்கோல்
முழுப்படப் படைத்து வைத்து
வந்தவர் தலையும் நீட்டா
வகைபெற நிரப்பி யுள்ள
புந்தியைக் கண்டு நொந்தார்;
பொருக்கென அகன்று போனார்!

உட்புகு போதே உள்ளம்
உவந்திட இளவல் இல்லில்
பட்டொளி விளக்கி னோடு
பத்திகள் எரியக் கண்டார்;
ஒட்டிய இடத்தில் தூய
உள்ளொளி நூல்கள் கண்டார்;
மட்டிலா மகிழ்வால் தந்தை
மைந்தனை அணைத்துக் கொண்டார்.

ஒளியினால் நிரப்பக் கூடும்
ஒருபெரும் வைக்கோற் போரால்
வெளியெதும் இல்லா வாறு
வீடெலாம் அடைக்கக் கூடும்;
உளநிலை போன்றே அன்னார்
உரையொடு செயலு மாகும்
தெளிவுறக் கண்டேன் என்று
திருத்தமாய் உரைத்தார் தந்தை.

58. எங்கள் கறவை மாடு

எங்கள் கறவை மாடோர்
ஏற்ற மிக்க மாடாம்.

இன்று வந்த தில்லை
நேற்று வந்த தில்லை
என்று வந்த தென்றே
எவரும் கண்டார் இல்லை — எங்கள்.

புல்லைத் தின்னா மாடு
புனலைப் பருகா மாடு
நெல்லின் பயிரைக் கண்டும்
நேராய்ச் செல்லும் மாடு — எங்கள்.

வாயும் வயிறும் இல்லை
வாலும் தலையும் இல்லை
ஏய கால்கள் இல்லை
எனினும் தாவி ஓடும் — எங்கள்.

பெரிய மடியாய்த் தோன்றும்
    பிறகு பிறகு தேயும்
உருவ மற்றும் போகும்
    உடனே வளர்ந்தும் காணும் – எங்கள்.

கொட்டும் பாலோ வெள்ளம்
    கொள்ளை கொள்ளை வெள்ளம்
கட்டிக் காக்க ஆவல்
    கையால் ஆக வில்லை – எங்கள்.

குடத்தில் பிடித்துப் பார்த்தும்
    கொஞ்சங் கூடக் காணோம்
தொடுத்துப் பிடித்துச் சேர்த்தும்
    துளியும் நிற்க வில்லை – எங்கள்.

கயிறு மத்துப் போட்டுக்
கடைந்தெ டுப்ப தெங்கே
தயிரும் மோரும் நெய்யும்
தாவிக் குடிப்ப தெங்கே – எங்கள்.

மாடு நல்ல மாடு
மண்ணில் நடவா மாடு
வீடு வாயில் விட்டு
விண்ணில் ஓடும் மாடு – எங்கள்.

கண்ணால் காணும் ஆவல்
கனிந்து விட்ட தென்றால்
விண்ணை நோக்கிக் காண்பேன்
வெண்ணி லாவே பேராம் – எங்கள்.

59. மூக்கு வளையம்

காக்கை ஒன்று வந்ததுவே
காகா ஒலியோ வந்திலதே
மூக்கைக் கூர்ந்து பார்த்திடவே
மூடு வளையம் இருந்ததுவே!

எவரோ ஒருவர் பிடித்திதனை
இரக்க மின்றி வளையத்தை
அவருக் கினிதாய்ப் போட்டுள்ளார்
அதற்குத் துன்ப அளவுண்டோ?

நீரும் உணவும் கொள்ளாமல்
நெடிய ஒலியும் செய்யாமல்
சேரும் உறவும் வெறுத்துவிடச்
செய்தல் என்ன இன்பாமோ?

அறியாத் தவறோ இத்தவறே?
அறிந்தே செய்யும் தவறன்றோ!

அறிந்த ஒருவர் வளையத்தை
அகற்றா விட்டால் என்னாகும் ?

காக்கை எதுவும் கழற்றிடுமோ ?
கழன்று தானே வீழ்ந்திடுமோ ?
நோக்கம் என்ன, நோவாக்க ?
நொண்டி யுள்ளச் செயலன்றோ !

பறவை போலப் பறந்திடவே,
பார்த்த உள்ளம் மேலேறக்,
கறவைக் காம்பை அறுப்பான்போல்
கயவன் இதனைச் செய்தானே !

பறக்கும் உள்ளப் பண்பாளன்
பறவை இதன்தன் வளையத்தைத்
துறக்கச் செய்ய வாயாதா ?
துடிப்பும் நீங்கி ஓயாதா ?

60. பறக்கும் தட்டு

வெள்ளித் தட்டைத் தூக்கி
வீசி விட்டது பிள்ளை;
வெள்ளித் தட்டும் ஓடி
வீதி யிற்போய் வீழ்ந்தது!

வெள்ளித் தட்டைத் தேடி
வீட்டுள் கொண்டு வந்தேன்
பிள்ளை தூக்கி எறியப்
பின்னும் என்ன செய்குவேன்?

மாலை தொடுக்கு மாறு
மல்லி கைப்பூ வைத்தேன்
காலால் எற்றி விட்டது
கண்ட பக்கம் எல்லாம்.

பூவைச் சேர்த்து வைத்தேன்
　　பொறுமி அழுது கொண்டே
தாவி எற்றி விட்டது
　　தளர்ந்தேன் என்ன செய்குவேன் ?

வெள்ளித் தட்டை மறைத்தேன்
　　மல்லி கைப்பூ மறைத்தேன்
உள்ள சினமும் ஓங்கி
　　ஓயா தழுது புரண்டது.

“தட்டும் பூவும் எங்கே ?
　　தருக இப்போ” தென்றது
“விட்டெ றிந்த பின்னும்
　　வீட்டுள் வருமோ” என்றே,

விண்ணைச் சுட்டிக் காட்டினேன்
விரிந்த மதியும் மீனும்
கண்ணைச் சிமிட்டிக் காட்டின
கடிய சீற்றம் பறந்தது.

"சீற்றத் தாலே எறிந்தனை
சீற்றத் தாலே போயது
சீற்றம் நீங்கி விட் டால்,
சீற்றம் நீங்கி வந்திடும்"

என்று சொன்னேன் "பறந்தவை
என்று வருமோ ?" என்றது.
"சென்று பார்ப்போம் வீட்டுள்
சேர்ந்தி ருக்கும்" என்றேன்.

61. வேலை கெட்ட வேலை

வெளுத்த வானம் கறுத்தது;
கறுத்த வானம் நெரித்தது;
நெரித்த லாலே இடித்தது;
இடிக்க மின்னல் அடித்தது;
இடியைக் கேட்டுத் துடித்தது;
ஒளியைப் பார்த்துப் படுத்தது;
விடிந்த பொழுதில் தாயிடம்
விரும்பிக் குழந்தை சொன்னது;

வானத் துள்ளோர் கெட்டவர்
வாய்த்த உடலைக் சாய்க்கடைச்
சேற்றில் புரட்டிக் கறுக்கிறார்;
சேர்ந்து வாழ மறுக்கிறார்;

வாளால் வீசிச் சாடுறார்;
வலிய இரைச்சல் போடுறார்;
கனத்த சண்டை முடிந்தபின்
கண்ணீர் வடித்துக் கிடக்கிறார்;
காலைப் பொழுதில் அமைதியாம்;
மாலைப் பொழுதில் சண்டையாம்;
வேண்டா அம்மா வேண்டாவே
வேலை கெட்ட வேலையே!

62. தேளைக் கடிப்பேன்

கிட்டு பெரிய பேச்சாளி;
கிடுகிடுப் பேச்சால் திணறவைப்பான்;
சுட்டுத் தள்வேன் கொக்கென்பான்
சோடி யாக விழுமென்பான்!

காட்டில் செல்ல யானஞ்சேன்
கரடி புலிக்கும் யானஞ்சேன்
வேட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டால்
வீரிட் டோடும் அவையென்பான்.

பயந்தான் கொள்ளிப் பயல்களுக்கே
பாம்புப் பதற்றம் உண்டென்பான்
வியந்து வியந்து மகிழ்ந்திடுவான்
வெற்றிச் சிரிப்புச் சிரித்திடுவான்.

உண்ணா விடினும் ஒருவேளை
　　உறக்கம் வருமாம் கிட்டுவுக்கே!
பண்ணாய்த் தன்னைப் புகழானேல்
　　பாவம்! உறக்கம் கொள்ளானே!

குப்பன் ஒருநாள் அகப்பட்டான்
　　கூறி மகிழத் தொடங்கிவிட்டான்
"அப்பா! அப்பா! பார்த்திடுவாய்;
　　அலறும் புலியாம் இதுகண்டாய்!

பார்த்தே நடுங்கும் பயந்தானே
　　பாரிதன் வாய்க்குள் என் தலையைச்
சேர்த்தே மீண்டும் எடுத்திடுவேன்
　　செய்யத் திறமை உனக்குண்டோ?"

என்றே நகைத்து மெதுவாக
இருகை யாலும் புலிவாயை
நன்றாய்த் திறந்து தலைநுழைத்தான்
நடுங்கும் குப்பன் வியப்புற்றான்.

வாய்க்குள் தலையை நுழைத்ததுமே
ஐயோ ஐயோ என்றலறிப்
பாய்ந்து விழுந்து புரண்டழுதான்
பயந்த குப்பன் 'என்' என்றான்!

"ஏதோ ஒன்று கடித்ததடா!
ஏறி ஏறித் துடிக்குதடா!
யாதோ செய்வேன் எரியுதடா!
ஐயோ தலையைப் பிடித்திடடா?

வைக்கோல் திணித்த புலித்தலையால்
வன்மை காட்ட நினையழைத்தேன்;
மிக்க பெருந்தேள் உள்ளிருந்தே
மேற்கா தருகில் பிடுங்கியதே!

என்ன செய்வேன்?" எனக்குப்பன்:
"ஏட கிட்டு வாய்ப்பன்றோ
முன்னர்ச் சொன்ன பொய்யோடும்
கடிப்பேன் தேளென்"றுரை யென்றான்!

63. பிழைகள் அகல

களைகள் இலையேல் விளைவு சிறக்கும்;
பிழைகள் இலையேல் பெருகும் மதிப்பெண்;
அளவாய் எழுதுதல் ஆராய்ந் தெழுதுதல்
தெளிவும் திருத்தமும் திகழ எழுதுதல்
முறையாய்ப் பேணின் நிறையும் மதிப்பெண்;
மனனப் பகுதியில் தனிப்பெருந் திறமும்
இலக்கணப் பகுதியில் இணையிலாப் பயிற்சியும்
ஏய்ந்திட லாயின் எட்டிய நூறும்
வாய்ந்திடும் மதிப்பெண் இவற்றை
ஆய்ந்துநீர் காண்மின் அயர்வறச் சிறந்தே!

64. நாடு

ஓட்டை யான குடத்திலே – நீர்
ஒற்றைச் சொட்டும் நிற்குமோ?

ஓட்டை யான படகிலே – அதன்
ஓட்டி தானும் பிழைப்பனோ?

குடத்தின் ஓட்டை போலவும் – அப்
படகின் ஓட்டை போலவும்
தொடங்கும் ஓட்டை நாட்டிலே – பெருந்
தொல்லை தொல்லை ஆகுமே!

நாட்டைக் கெடுக்கும் பல்குழு – மிக
நயமாய்க் கெடுக்கும் உட்பகை
கூட்டாய் அழிக்கும் குறும்புகள் – இவை
கொண்ட நாடு வாழுமோ?

மக்க ளுக்காய் ஆட்சியும் – அவ்
வாட்சிக் காக மக்களும்
ஒக்க வாழும் நாடதே – என்றும்
ஓங்கி வாழும் நாடதாம்.

65. தம்பி கேள்

மண்ணை விண்ணுக் கொப்பென
மாற்றும் தூயன் வள்ளுவன்
வண்மை நூலைத் தம்பியே
வாழ்க்கைப் பேறாய்க் கொள்ளுவாய்!

சேரன் தம்பி செய்ததாம்
செஞ்சி லம்பைக் கற்றிட
வீரத் தம்பி ஆர்வமாய்
வேட்கை கொள்வாய் வாய்ப்பிதே!

சாத்தன் தந்த மேகலை
சால்பு மிக்க மேகலை
ஈத்து வாழும் இன்பினை
ஏற்று வாழ ஆய்குவாய்!

தேவர் தந்த மாமணி
        தேனை நேர்சிந் தாமணி
யாவர் நெஞ்சும் அள்ளுமே
        நாமும் கொள்வோம் தம்பியே!

கம்பன் தந்த காவியம்
        கட்டிப் பாகாம் காவியம்
தம்பி தம்பி ஆவலாய்த்
        தள்ளா தென்றும் கொள்ளுவாய்.

பத்துப் பாட்டும் பாட்டல்ல
        பண்டைப் பாட்டர் பேரர்க்கு
வைத்த சொத்தாய் எண்ணுவாய்
        வையம் வாழ வாழுவாய்.

சங்கம் தந்த எண்தொகை
        சான்றோர் தேடித் தந்ததாம்
தங்கப் பேழை ஆர்வமாய்த்
        தாங்கு தம்பி மேம்பட.

நந்தம் மாண்பைப் பாரிலே
நாட்டு நற்றொல் காப்பியம்
சிந்தை கூர்ந்து மூச்சொடும்
சேரக் காத்து வாழுவாய்.

ஞாலம் உய்ய நல்லுரை
நாட்டிச் சென்றோர் நூல்களே
கால மாரி ஆவதாம்
கண்டு வாழ்வாய் தம்பியே!

தாயைக் காக்கும் சேயெனும்
தாழாப் பேறு தாங்குவாய்
ஏய வாழ்வில் அன்னையை
ஏற்றி வைத்தே வாழுவாய்.

66. தமிழ்

தமிழே இனிய உயிராகும் – அத்
தமிழே வாழ்வுப் பயிராகும்.

தமிழே சுவையாம் நீராகும் – அத்
தமிழே வளமாம் சோறாகும்.

தமிழே பாகுச் சுவையாகும் – அத்
தமிழே அறிவுக் குவையாகும்.

தமிழே விரும்பும் விருந்தாகும் – அத்
தமிழே பிணியின் மருந்தாகும்.

தமிழே பண்பின் அணியாகும் – அத்
தமிழே மானத் துணியாகும்.

தமிழே விளைவின் நிலமாகும் – அத்
தமிழே உயிரின் நலமாகும்.

தமிழே அருவி ஒழுக்காகும் – அத்
தமிழே அமிழ்த முழுக்காகும்.

தமிழே ஒளியின் பிறப்பாகும் – அத்
தமிழே உணர்வின் சிறப்பாகும்.

தமிழே தமிழே தானாகும் – அத்
தமிழே வற்றாத் தேனாகும்.

தமிழே தமிழே தானாவான் – அத்
தமிழால் தமிழர் தேனாவான்.

67. அன்பு

பாலும் தேனும் கலந்ததுவோ ?
பாகும் பருப்பும் இணைந்ததுவோ ?
தோலும் துளைக்கும் குளிராகித்
தொல்லை நீக்கும் அன்பிணையே !

அன்பால் வாழும் வாழ்வதுவே,
அமுதாய் வாழும் வாழ்வாமே !
முன்னும் பின்னும் காணரிய
முதிர்ந்த இறையே அன்பாமே !

அன்பை இல்லார் உயிரில்லார்
அன்பை இல்லார் உறவில்லார்
அன்பை இல்லார்க் கிருப்பவைதாம்
அவரே இல்லை எவை இருக்கும் ?

68. காலைக் காட்சி

கோழிக் குரலும் எழுந்ததம்மா – மனம்
கூசும் இருளும் மறைந்ததம்மா
வாழி யுரைக்கும் பறவையம்மா – அதை
வணக்கம் புரிந்திட வந்திடம்மா.

காலை மலரும் மலர்ந்ததம்மா – அதைக்
கண்டிடும் பேறும் கிடைத்ததம்மா
மேலைப் பழவினை மாய்ந்ததம்மா – மக்கள்
மேம்பட நல்வினை செய்திடுவாய்.

பறவை ஒலியும் எழுந்ததம்மா – அதன்
பண்ணொலி பாடலைப் போன்றதம்மா
கறவை வருந்தி அழைக்குதம்மா – அதன்
கன்றுக் கமுதம் வழங்கிடவே.

வான முகட்டைக் கிழித்ததுபோல் – பெரும்
வைய வழியைத் திறந்ததுபோல்
கான நெருப்புப் பிழம்பதுபோல் – கதிர்
காட்டும் புதுமை தெரிந்திடுவாய்.

தங்கத் தகடு நகர்வதுபோல் – கதிர்
தானே விரைந்து நகர்வதுபார்
பொங்கும் கடலில் பிறந்திருந்தால் – அது
பொலியும் வெம்மைப் பிழம்பாமோ ?

தங்கத்தைக் காய்ச்சி வடித்திடவே – அங்கே
தனிப்பெருங் கொல்லரும் உள்ளனரோ
எங்கணும் பார்த்து மகிழ்ந்ததுண்டோ – இந்த
ஏரியைப் போலொரு தங்கவேரி!

நீலக் கடல்நீர்ப் பரப்பதிலே – இந்த
நீளக் கலைக்கதிர் பட்டதனால்
கோலக் கடலாகிக் காணுதம்மா – உள்ளம்
கொள்ளைக் கடலில் குவியுதம்மா!

மெல்லக் கதிரும் எழுந்தவுடன் – கரு
மேகத் திரையும் சுருளுதம்மா
நல்லவெண் வெள்ளி உருக்கதுபோல் – கடல்
நாவுறப் பேசிடத் தோணுதம்மா!

69. பருவமாற்றம்

வேப்பங் காயோ கசப்பாகும்
வேம்பும் பழுத்தால் இனிப்பாகும்;
மாங்காய் பிஞ்சில் புளிப்பாகும்
மாவே பழுத்தால் இனிப்பாகும்.
வாழைக் காயோ துவர்ப்பாகும்
வகையாய்ப் பழுத்தால் இனிப்பாகும்
பருவம் வழங்கும் கொடைகளிவை
பார்க்கப் பலவும் தெளிவாமே!

70. உடல்நலம்

வேப்பி லையைத் தின்னலாம்;
　　விரும்பித் துளசி தின்னலாம்;
காப்ப தவையே உடல்நலம்;
　　கருதித் தின்றால் கெடலில்லை!

பாகற் காயோ கசப்புத்தான்;
　　பழகிப் போனால் சுவைப்புத்தான்;
நாவுக் காக வாழாமை
　　நலத்துக் கான வாழ்வாமே.

சோற்றுக் காக வாழ்வதோ ?
　　சுவையைக் கருதி வாழ்வதோ ?
கூற்றை வெல்லும் ஆற்றலைக்
　　கொள்ள லாகும் 'நா' காத்தல்!

நாவுச் சுவையை விரும்புதல்
நாளும் நோய்க்கே விரும்புதல்;
கூவி மகிழ வேண்டினால்
கொஞ்சம் அடக்கு நாவையே!

71. கண்ணைக் காத்தல்

கண்ணைக் கழுவு குழந்தாய்;
கதிரை நோக்கு குழந்தாய்;
கண்ணில் ஒளியோ பெருகும்;
காட்சி எல்லாம் விரியும்!

காலை மாலை கதிரைக்
கண்டு நீரால் கழுவல்,
வேலை யாகக் கொண்டால்
வேண்டாம் கண்ணுக் காடி!

ஆடி ஆடி நீரில்,
அழகுக் கதிரைக் காணின்,
ஓடிப் போகும் கண்ணோய்
உண்மை அறிந்து கொள்வாய்.

தொடர்ந்து படிக்கக் கண்ணைத்
துலக்க மாகக் கழுவு;
தொடரும் வெப்பம் குன்றும்
தூய்மை குளுமை ஒன்றும்!

நீரில் குளித்த பின்னே,
நீயும் படிக்கத் தொடங்கின்
வேரில் பழுத்த சுளையாய்
வேண்டும் கல்வி சுவையாம்!

72. தாத்தா

செல்வம் சேர்த்த தாத்தா;
செழுமை சேர்த்த தாத்தா;
கல்வி பெற்ற தாத்தா;
கனிவு மிக்க தாத்தா.

ஊருக் குதவு தாத்தா;
உழைப்பு மிக்க தாத்தா;
யாருக் கேனும் நன்மை
ஆய்ந்து செய்யும் தாத்தா.

உலகம் வாழ எண்ணும்
உயர்வு மிக்க தாத்தா;
கலகம் அறியாத் தாத்தா;
கருணை மிக்க தாத்தா

எங்கள் தாத்தா போல,
எவர்க்கும் தாத்தா இருந்தால்,
பொங்கும் இன்ப உலகம்
புவியே ஆகும் உண்மை!

73. பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி,
பாடு பட்ட பாட்டி;
கூட்டுக் குடியில் இருந்து,
குணத்தில் உயர்ந்த பாட்டி.

கதையும் பாட்டும் பாட்டி
கட்டிக் கட்டிச் சொல்வார்;
விதையும் விளைவும் போல
விரும்பு மாறே செய்வார்.

பாட்டி சொன்ன எல்லாம்
எழுதி வைத்தி ருந்தால்,
ஏட்டை வண்டி அளவாய்
ஏற்ற வேண்டி இருக்கும்!

பாட்டி மட்டும் கொஞ்சம்
எழுதப் படித்தி ருந்தால்,
பாட்டி ஔவை அவர்தாம்
பாடிப் போற்றும் உலகே!

74. அப்பா

அப்பா எங்கள் அப்பா,
அருமை யான அப்பா;
ஒப்பில் லாத அப்பா;
ஒழுங்கு மிக்க அப்பா.

கடமை தவறா அப்பா;
காலம் தவறா அப்பா;
மடமை அறியா அப்பா;
மதிப்பிற் சிறந்த அப்பா.

கண்ணைக் காத்தல் போலக்
கருதிக் குடும்பம் காப்பார்;
எண்ணி எழுதிக் கணக்காய்,
என்றும் செலவு செய்வார்.

கல்வி தந்த அப்பா;
கண்ணைத் திறந்த அப்பா;
நல்ல வாழ்வு தந்த
நன்றிக் குரிய அப்பா!

75. அம்மா

எங்கள் அம்மா போல
எவர்க்கு வாய்த்தார் அம்மா ?
தங்க மான அம்மா;
தவத்தால் பெற்ற அம்மா!

பொங்கல் மனையைப் போலப்
பொலியும் என்றும் மனையே!
எங்க ளுக்குக் கவலை,
என்றும் இருந்த தில்லை

'வேண்டும்' என்று நாங்கள்,
வேண்டு முன்னர் அவரே
வேண்டு கின்ற வற்றை
விரும்பி விரும்பிச் செய்வார்!

அம்மா என்றால் அம்மா;
அருமை ஆசான் அம்மா;
கொம்புத் தேனைப் போலக்,
குளிரப் பேசும் அம்மா!

வம்பு செய்த போதும்
வன்மை காட்டா அம்மா;
தெம்பு மிக்க அம்மா;
தெய்வ மான அம்மா.

76. அண்ணன்

எங்கள் அருமை அண்ணன்,
என்றும் இனிய அண்ணன்;
தங்கை தம்பி மாரைத்
தாங்கிக் காக்கும் அண்ணன்!

அப்பா அம்மா இருவர்
ஆன ஒருவர் அண்ணன்;
தப்பா சரியா சொல்லித்
தட்டிக் கொடுக்கும் அண்ணன்

அடித்த லில்லா அண்ணன்;
அன்பு வடிவாம் அண்ணன்;
படிப்பில் புலியாம் அண்ணன்;
பண்பில் உயர்ந்த அண்ணன்.

சொல்லும் செயலும் ஒன்றாய்ச்
சுடரும் எங்கள் அண்ணன்;
கல்லும் கனிய வைக்கும்
காவல் தெய்வம் அண்ணன்.

77. அக்கை

எங்கள் அக்கை போல
    எவர்க்கு வாய்ப்பார் அக்கை ?
எங்கள் போலப் பேறும்
    எவரே பெற்றார் இங்கு ?

அக்கை என்றால் அக்கை;
    ஆடிப் பாடும் அக்கை;
சர்க்க ரைபோல் பேசும்
    சால்பு மிக்க அக்கை!

வாழ வேண்டும் வகையை
    வாழ்ந்து காட்டும் அக்கை;
வாழை மரம்போல் குடும்பம்
    வாழ வாய்க்கும் அக்கை.

அம்மா வுக்குப் பின்னே
அம்மா ஆன அக்கை;
சும்மா சொல்ல வில்லை
சொல்லும் உயிரே அக்கை!

78. தம்பி

தம்பி என்றால் தம்பி
தாவும் அன்புத் தம்பி
வம்பு துன்பு தெரியா
வடிவ மான தம்பி.

அப்பா அம்மா எவர்க்கும்
அடியின் நிழலே ஆகிக்
கொப்புத் தேனாய் மழலை
கொட்டித் தட்டித் திரிவான்.

கண்ணில் மின்னல் உண்டா ?
கட்டிப் பாகே அவனா ?
வெண்ணெய் தானா உடலம்
விரும்பி நிற்பார் எவரும்.

சுறுசு றுப்பே தம்பி

சுடர்வி ளக்கே தம்பி

எறும்பும் தோற்கும் அவற்கே

குறும்பும் விரும்பச் செய்வான்.

79. தங்கை

பொங்கு மதியே தங்கை
பொருந்தும் எழிலே தங்கை
எங்கள் தங்கை தமிழே
எங்கள் மூச்சும் அவளே.

கோலம் போடும் அழகைக்
கொஞ்சிப் பார்க்க வைப்பாள்
காலைக் கதிரும் சொக்கிக்
கதிரைப் பரப்பும் அங்கே.

பல்லைப் பார்த்தால் முத்து
பாதம் மலரின் கொத்து
வில்லைப் போலப் புருவம்
விரும்பும் அன்பின் உருவம்.

தங்கை இருக்கும் இடத்தில்
தவறிக் கூடத் துன்பம்
தங்கி இருப்ப தில்லை
தவத்தின் பிறவி அவளே

உறங்கும் முகத்தைக் காணக்
கிறங்க வைக்கும் எழிலே!
இறங்கு காலம் இல்லை
இனிய தங்கை உள்ளாள்.

80. உடன்பிறந்தார்

முன்னே பிறந்தான் கண்ணன்
　　முறையால் அவனென் அண்ணன்
பின்னே பிறந்தாள் மங்கை
　　பேறு பெற்ற தங்கை!

அண்ணன் தங்கை கூட
　　ஆடிப் பாடி மகிழ்வேன்
கண்ணைப் போல அவர்கள்
　　கலந்து விட்ட உயிர்கள்!

'கூடப் பிறந்தார்' என்னும்,
　　கொஞ்சும் பெயரை எண்ணின்,
கூடல் இன்றிச் சண்டை
　　கொள்ள முறைமை உண்டோ?

81. குட்டிப் பையன் சிரிக்கிறான்

குட்டிப் பையன் தட்டினான்,
எட்டுப் பத்துப் பானைகள்;
தட்டி முட்டி வீழ்ந்தன;
குட்டிப் பையன் சிரிக்கிறான்.

அடுக்க ளைக்குள் போயினான்;
அரிசி மாவை அள்ளியே
மடக்கி மடக்கித் தெளிக்கிறான்;
மகிழ்ச்சிப் பெருக்கில் சிரிக்கிறான்.

தண்ணீர்க் குடத்தைச் சாய்க்கிறான்;
தாளம் போட்டுக் குதிக்கிறான்;
எண்ணெய்ப் புட்டி வீசியே
எறிந்து பெரிதாய்ச் சிரிக்கிறான்.

ஐந்து நிமிடம் அவ்வளவே;
ஆன வெல்லாம் அலைக்கழிவே;
வந்த இழப்பும் உடைப்புமெலாம்,
வாய்த்த சிரிப்பே அவனுக்கே!

கண்ணைப் பொத்தி ஓடிக்
காண நிற்பான் மாடி!
உண்ண அழைக்கும் வேளை,
ஓடி ஒளிவான் மூலை!

வீடு பேறு என்னும்
விருப்ப மிக்க உலகம்
வீடு தானே என்று
விளங்கச் செய்வான் தம்பி.

82. புகழ்கூறு

குட்டிப் பயலைக் குட்டாதே!
கொஞ்சி மகிழ்வாய் கட்டாயம்;
மட்டி மடையன் என்னாதே!
மணியே மதியே என்பாயே!

முட்டாள் முட்டாள் என்பாயேல்,
முட்டாள் எண்ணம் தங்கிவிடும்!
கெட்டி கெட்டி என்பாயேல்,
கெட்டி எண்ணம் கிளர்ந்துவிடும்!

குறையைப் போக்க நினைவாயேல்
நிறைவைக் கூறிப் புகழ்வாயே!
நிறைவுப் புகழ்ச்சி, கொண்டுள்ள
குறைவை அகற்றி ஒழித்திடுமே!

புகழை விரும்பார் அருமையரே,
புகழால் திருத்தல் பெருமையதே!
இகழ இகழ மிக இழிவாம்
புகழப் புகழ மிகுபுகழாம்!

புகழைக் கூறி, இகழ்வதனைப்
புகன்று திருத்தல் மேலாகும்!
புகழைக் கூறத் தயங்காதே!
புகழே ஆக்கம் மயங்காதே!

83. ஆசிரியர்

எங்கள் ஆசான் அரியர்;
இனிதில் வாய்த்த பெரியர்;
பொங்கும் அறிவின் அருவி;
பொலியும் எங்கள் ஆசான் – எங்கள்

ஆனா முதலாய்த் தந்தார்;
ஆகும் கணக்கும் தந்தார்;
தேனாய்ச் சுவைக்க எல்லாம்
திரட்டித் திரட்டித் தந்தார் – எங்கள்

காலம் தவற மாட்டார்;
கடமை தவற மாட்டார்;
பாலைப் போல உள்ளம்;
பசியைப் போக்கும் பாடம் – எங்கள்.

கடுமை யாகப் பேசார்;
கண்டித் தாலும் ஏசார்;
தொடுத லில்லை கம்பு;
தொழிலே தெய்வ அன்பு – எங்கள்

எழுத்தைப் பார்த்தால் முத்து;
எங்கள் நலமே சொத்து;
பழுத்த கிழவர் ஆயும்,
பாலர் ஆக வாழ்ந்த – எங்கள்.

84. உலகம்

பெரிய வட்டை ஒன்றைச்
சிறிய வட்டை சூழ

அமைத்து வைத்த தென்ன
அழகாய் அமைந்த வானம்!

தட்டு மாறி விட்டால்
தவறு யாதும் இல்லை!

வானத் தட்டு மாறின்
வைய வாழ்வு என்னாம்?

அழகு மிக்க உலகம்!
அறிந்தால் உண்டோ கலகம்!

85. கோயில்பார்!

கோயில் விரிவு பார்பாப்பா!
கொள்வாய் விரிவும் அதுபோலே!
கோபு ரத்தைப் பார்பாப்பா
கொள்வாய் உயரம் அதுபோலே

இறையை மதித்தல் என்பதுதான்
எவரை எனினும் மதிப்பதுவே
இறைமைப் பெயரால் சண்டையிடல்
இறைக்கே பெரிய இழிவாக்கும்.

பெற்றோர்க் குவகை அவர்தந்த
பிள்ளைக் குவகை செய்வதுவே!
பெற்றோர்க் குவகை ஆகிடுமோ
பிள்ளை களுக்குள் மோதுவதே!

ஆண்டான் ஒருவன் தானென்றால்
அவன்றன் பேரால் மோதுவதேன்
ஈண்டோர் பொருளுக் கெத்தனைபேர்
இருக்கக் காணல் மோதுதற்கோ?

ஒன்றி வாழல் நலமாகும்
ஒன்றாய் வாழல் மிகநலமாம்
குன்றாய் நிற்போம் அசையாமல்
குணமாய் நிற்போம் இசைவோடே.

86. கோயில்

ஊருக் கமைந்த கோயில்
உயர்வுக் கெழுந்த கோயில்
யாரும் விரும்பும் கோயில்
நீயும் விரும்பல் கடமை!

கட்டு மானக் கலையா
கல்லில் வடிக்கும் கலையா
நட்டு வாங்கம் இசையா
நாடு காண நிற்கும்!

காவல் கோட்டை கோயில்
கருவூ லம்மும் கோயில்
தாவும் நோயை நீக்கத்
தக்க நிலையம் கோயில்!

கோயிற் குள்ளே கேடு
குலவும் என்றால் உடனே
வாயில் புகுந்தே ஒழித்தல்
வாய்த்த கடனாய்ப் புரிவோம்.

கேட்டை நீக்கல் விட்டுக்
கேடே கோயில் என்று
கோட்டை விடுதல் குறையாம்
கொள்கை என்னல் கறையாம்.

பாம்பும் தேளும் கண்டு
பாட்டன் வீட்டை விடவோ ?
தீம்பு கண்டு தீர்க்கும்
திடத்தைக் கொள்ளல் தீர்வாம் !

87. இறையவனே!

அன்புப் பொருளாம் இறையவனே
அருளின் உருவாம் மறையவனே
மின்னல் ஒளியாய் நிறைபவனே
மேலோர் நெஞ்சில் உறைபவனே
இன்பம் எல்லாம் தருபவனே
இன்னல் தொலைக்க வருபவனே
உன்னை வணங்கி எழுகின்றோம்!
உலகம் உய்யத் தொழுகின்றோம்!

ஆசிரியரும் மலையகம் சிவம் அவர்களும்